மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்தப் பகுதி மிகவும் பள்ளமான பகுதியில் இருக்கும் காரணத்தாலும், கழனிகள் மேட்டுப் பகுதியில் இருக்கும் காரணத்தாலும் நீர் கசிந்து வருவதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டுமானால் மேம்பாலம் கட்டுவது ஒன்றுதான் வழியாகும். அதற்கு மத்திய அரசு 50 சதவிகிதம் நிதியை மேற்கொள்ள வேண்டும், மத்திய அரசுக்கு அதுபற்றிப் பரிந்துரை செய்து மாநில அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

கூத்தாநல்லூர் அதிவீரராமனார் பாலம்.

* வினா எண். 52—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் பேரூராட்சியில் வெண்ணாறு அதிவீரராமனார் பாலம் கட்டப்படுவதற்கென பொதுமக்களும், பஞ்சாயத்தும் கட்டிய ரூ. 25,000-த்தை திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூத்தாநல்லூர் பேரூராட்சியில் வெண்ணாறு அதிவீரராமனார் பாலம் கட்டப்படுவதற்கென பொதுமக்களும், பஞ்சாயத்தும் கட்டிய ரூ. 22,500-ஐ திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்த காலத்தில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு அந்தப் பாலத் திறப்பு விழா நிகழ்ச்சியின்போது இந்தப் பணம் திருப்பி அளிக்கப்படும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். காலம் கடந்திருக்கிறது. ஒரு முதலமைச்சர் கொடுத்த உறுதிமொழி என்ற அடிப்படையில் அதை மறு பரிசீலனை செய்து அந்தத் தொகையைத் திருப்பி அளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 6–6–1975 ஆம் தேதியன்று இந்தப் பாலம் முன்னாள் முதலமைச்சரான இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அந்த நேரத்தில் 22,500 ரூபாயைத் திருப்பிக் கொடுப்பதாக அவர் வாக்குறுதி அளித்ததாக அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவர் அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், இது சம்பந்தப்பட்ட கோப்புகளில் அப்படி அறிவித்தது பற்றியோ, ஆணையிட்டது பற்றியோ எந்தவிதமான குறிப்புகளும் இல்லை. ஆகவே, அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.